

# தெற்காசியாவில் பால்நிலை சமத்துவத்தை முன்கொண்டு செல்பவர்களுக்கான கம்லா பாசின் விருது

ஒவ்வொரு வருடமும் பின்வரும் விடயங்களில் தெற்காசியாவைச் சேர்ந்த இருவருக்கு இவ்விருது வழங்கப்படுகின்றது:

- தெற்காசியாவில் பாரம்பரியம் அற்ற வாழ்வாதாரங்களில் ஈடுபடும் பெண்களை கௌரவிப்பதற்கான ஒரு விருது.
- பால்நிலை சமத்துவத்தை நோக்கி பணிபுரியும் ஆண்களுக்கு அங்கீகாரமளிக்கும் விருது

இரண்டு விருதுப் பிரிவுகளிலும் சிஸ் மற்றும் ட்ரான்ஸ் பெண்கள் மற்றும் ஆண்கள் ஆகிய அனைவரும் உள்ளடக்கப்படுகின்றனர்.

விருது பின்வரும் விடயங்களைக் கொண்டதது:
கேடயம் ஒன்றுடன் இந்திய ரூபாய்கள் 100,000 பரிசுத் தொகை

தெற்காசியாவில் பணிபுரியும் மாற்றத்தை ஏற்படுத்தும் முகவர்கள், நிறுவனங்கள் மற்றும் கொடை வழங்குனர்களுடன் இணைந்து கற்கவும், இணையவும் அத்துடன் வலையமைப்பாக்கத்தை மேற்கொள்ளவும் விருது பெறுபவர்களுக்கு சிறந்த வாய்ப்பு உள்ளது.

## யாரால் விண்ணப்பிக்க முடியும்?

ஆப்கானிஸ்தான், பங்களாதேஸ், பூட்டான், இந்தியா, நேபாளம், பாக்கிஸ்தான் மற்றும் இலங்கை ஆகிய தெற்காசிய நாடுகளின் குடிமக்களிடம் இருந்து அத்துடன் அங்கு வசிக்கும் மற்றும் பணிபுரியும் மக்களிடம் இருந்து விண்ணப்பங்களை வரவேற்கின்றோம்.

இந்த 8 நாடுகளினதும் உத்தியோகபூர்வ மொழிகளில் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

## விருதுப் பிரிவுகள்

1. பாரம்பரியமற்ற வாழ்வாதாரத்தை (NTL) கடைப்பிடிக்கும் ஒரு பெண் (சிஸ்/ட்ரான்ஸ்)
2. பையன்கள்/ஆண்களுடன் பணி புரிவதன் மூலம் பால்நிலை நீதி மிக்க சூழலை இயலுமாக்குவது தொடர்பில் பணி புரியும் ஒரு ஆண் (சிஸ்/ட்ரான்ஸ்)

## தெரிவு அளவுகோல்கள்

### பிரிவு 1

- தனது/அவர்களின் சூழமைவில் பாரம்பரியம் அல்லாத வாழ்வாதாரத்தை குறைந்தது கடந்த 3 வருடங்களாக கடைப்பிடித்தல்
- வெறுமனே தனது/அவர்களின் உழைப்புகளின் மீதான கட்டுப்பாடு மாத்திரமன்றி தனது/அவர்களின் வாழ்வின் மீதான கட்டுப்பாட்டையும் கொண்டிருக்கும் வகையில் வலுப்படுத்தப்பட்டிருத்தல்.
- அவர்/அவர்கள் மாற்றத்தை ஏற்படுத்தும் முகவர்களாகக் காணப்படுவதுடன் ஏனையோருக்கும் வாய்ப்புகளை ஏற்படுத்தியிருத்தல்.

பாரம்பரியம் அற்ற வாழ்வாதாரங்கள் என்பன குறிப்பிட்ட சாதி, சமூகம், மதக்குழு, அல்லது அவர்களின் பாலியல் நாட்டம், அவர்களின் பால்நிலை அடையாளம், மாற்றுத்திறன், அவர்களின் வாழிடம் மற்றும் இது போன்ற பல விடயங்களை கொண்ட நீண்டதாக இருக்க முடியுமான பட்டியலில் உள்ள விடயங்கள காரணமாக பெண்களைச் சூழக் காணப்படும் கண்ணாடிக் கூண்டை அல்லது கொங்கிரீட் கூரை மற்றும் சுவர்களை தகர்க்கக் கூடிய வாழ்வாதாரங்களாக அமைகின்றன, அத்துடன் இவை எந்த ஒரு சமூகத்திலும் காணப்படும் பாகுபாட்டை ஏற்படுத்தும் கட்டமைப்புகள் காரணமாக வேறுபடுகின்றன. ஊதியமற்ற பணிகளைச் சூழக் காணப்படும் பால்நிலை நெறிமுறைகள் பெண்கள் வாகனம் செலுத்துதல் அல்லது மேசன் வேலை போன்றவற்றை பெறுவதைத் தடுக்கும் காரணங்களில் ஒன்றாக அமைகின்றது, இவ்வாறான பணிகளை பெண்கள் மேற்கொள்ளும் வேளை அவர்கள் பகலின் பெரும்பகுதியில் மற்றும் இரவிலும் வீட்டில் இருந்து வெளியே இருக்க நேரிடுகின்றது.
பாரம்பரியமற்ற வாழ்வாதாரங்கள் அத்துடன் இப்பிராந்தியத்தில் அவை தொடர்பில் காணப்படும் சில உதாரணங்களை இங்கே கிளிக் செய்வதன் மூலம் நோக்கலாம்.

பிரிவு 2

- பால்நிலை நீதி மிக்க ஒரு உலகை நோக்கி கடந்த 5 வருடங்களில் ஆண்கள்/பையன்களுடன் பணி புரிந்து வரல்
- பராமரிப்பு பணிகளில் பங்களித்தல், பெண்களின் தலைமைத்துவத்தை ஏற்றல், அனைத்து வகைகளிலும் அமைந்த பால்நிலை அடிப்படையில் அமைந்த வன்முறை மற்றும் பால்நிலைப்படுத்தப்பட்ட சமூக கலாச்சார நெறிமுறைகளுக்கு எதிராக போரிடல் மூலமாக தனது தனிப்ப்ட்ட வாழ்வு மற்றும் பணி வாழ்வில் தீங்கான ஆண்மைத்துவங்களை எதிர்த்தல்.
- அவர் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் முகவராகக் காணப்படுவதுடன் பால்நிலை நீதி மிக்க ஒரு உலகை சாத்தியமாக்க ஏனைய ஆண்கள் இடையே செல்வாக்கு செலுத்தத்தக்க ஒரு நபராகக் காணப்படல்.

பால்நிலை சமத்துவத்தை ஊக்குவிப்பதில் பையன்கள் மற்றும் ஆண்களை ஈடுபாடு கொள்ள வைப்பது ஒரு வளர்ந்து வரும் இயக்கமாக மாறியுள்ளது. "தரம் மிக்க ஆண்கள் சமத்துவத்துக்கு அஞ்சுவதில்லை" வாசகம் ஆணாதிக்க நெறிமுறைகளை சவாலுக்கு உட்படுத்துவதில் ஆண்களின் முக்கியத்துவத்தை சுட்டிக்காட்டுகின்றது. தமது வாழ்வில் ஆணாதிக்க நடைமுறைகளை சோதனை செய்தவர்கள் தமது சலுகைகளை ஏற்றுக்கொண்டவர்கள் அத்துடன் ஆணாதிக்கம் ஏற்படுத்தும் தடைகளை உற்சாகமாக ஏற்றுக் கொள்ளும் ஆண்களை நாம் இப்பிரிவில் தேடுகின்றோம். தீங்கான நடைமுறைகளுக்கு எதிராக போரிடுவதில் ஏனைய ஆண்களுடன் உற்சாகமாக இணைந்து செயற்படும் ஆண்கள், பெண்கள் மற்றும் பாலியல் சிறுபான்மைகளுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் எதிர்ப்பவர்கள், வீட்டின் பராமரிப்பு பணிகளில் பொறுப்புகளை பகிர்பவர்கள் அத்துடன் பெண்கள் மற்றும் ட்ரான்ஸ்ஜென்டர் தனிநபர்கள் தமது உரிமைகளை பெறுவதற்கு ஆதரவளிப்பவர்களை நாம் தேடுகின்றோம். மாற்றத்தை ஏற்படுத்தும் இந்த முகவர்கள் ஒருவரிடம் ஒருவர் கற்றுக்கொள்ளவும் பால்நிலை சமத்துவத்துக்காக ஆதரித்து வாதிட ஏனையோருக்கு ஊக்கமளிக்கவும் ஆதரவுச் சூழலை உருவாக்குவது எமது நோக்கமாகும்.

## கால எல்லைகள்

**மார்ச் 8, 2025:** விண்ணப்ப செயல்முறை திறத்தல்
**ஜூன் 30, 2025:** விண்ணப்ப செயல்முறை முடிவு
**ஜூலை-செப்டம்பர் 2025:** வேட்பாளர்களின் குறுகிய பட்டியல் மற்றும் நேர்காணல்
**அக்டோபர் 2025:** வெற்றியாளர்களின் அறிவிப்பு
**நவம்பர் 27, 2025:** நேபாளத்தின் லலித்பூரில் உள்ள TEWA இல் விருது வழங்கும் விழா

## இந்த விருது பற்றி

தெற்காசிய பெண்ணிலைவாத இயக்கங்களின் சின்னமான கம்லா பாசினின் நினைவாக இவ்விருது வழங்கப்படுகின்றது. பாரம்பரியமற்ற வாழ்வாதார மூலங்களில் பெண்கள் ஈடுபாடு கொள்வதன் உறுதியான ஆதரவாளராக அவர் இருந்தார். பால்நிலை சமத்துவத்தை ஏற்படுத்துவதில் ஆண்களை ஈடுபடுத்துவது தொடர்பிலும் ஆதரித்து வாதிடலை மேற்கொண்ட கம்லா "தரம் வாய்ந்த ஆண்கள் சமத்துவத்துக்கு அஞ்சாதவர்கள்" என்ற மகுட வாசகத்தையும் உருவாக்கினார்.

## தேர்வு செய்வோர்

அனு அகா (இந்தியா), பிந்தா பாண்டே (நேபாளம்), குஷி கபிர் (பங்களாதேஸ்), முனிஸே ஜஹாங்கீர் (பாகிஸ்தான்), நமிதா பண்டாரி (இந்தியா), ராதிகா குமாரசுவாமி- தவிசாளர் (இலங்கை)

## விருதுப் பங்காளர்கள்

அஸாத் நிதியம், iPartner India, இந்தியாவுக்கான தேசிய நிதியம் (NFI)

விருது பற்றிய மேலதிக விபரங்களைப் பெற www.kamlabhasinawards.org என்ற இணையத்தளத்துக்கு செல்லவும்.

Azad Foundation PARTNER INDIA nfi National Foundation for India Hosting Partner: Tewa